செ.வெ.எண்: 36 நாள்: 12.01.2017

**அறிவியல் கண்காட்சியில் பள்ளி மாணவ, மாணவிகள் தங்களது அறிவாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப, அவர்கள் அறிவுறுத்தல்.**

புதுக்கோட்டை தூயமரியன்னை மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின் சார்பில் 2016-17ம் கல்வியாண்டிற்கான மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் 11.01.2017 அன்று நடைபெற்றது.

இந்த மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டு பேசியதாவது:

தமிழகஅரசு பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி மாணவ, மாணவிகளின் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் அறிவியல் கண்காட்சி நடத்த தமிழகஅரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை தூயமரியன்னை மேல்நிலைப்பள்ளியில் அனைவருக்கும் இடைநிலை கல்வித்திட்டத்தின் சார்பில் 2016-17ம் கல்வியாண்டிற்கான மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் அறிவியல் மற்றும் கணிதம் தொடர்பான தலைப்பில் நடைபெற்றது.

இந்த அறிவியல் கண்காட்சியில் நமது மாவட்டத்திலுள்ள 36 ஆர்.எம்.எஸ்.ஏ பள்ளிகள், ஆர்.எம்.எஸ்.ஏ ஸ்டெம் சைன்ஸ் திட்டத்தினை செயல்படுத்தும் பள்ளிகள், ஆர்.எம்.எஸ்.ஏ ஏரியல் மேக்ஸ் திட்டத்தினை செயல்படுத்தும் பள்ளிகள், ஆர்.எம்.எஸ்.ஏ.ஆர்.ஏ.ஏ திட்டம், ஆர்.எம்.எஸ்.ஏ.எம்.காம் திட்டத்தை செயல்படுத்தும் பள்ளிகள் ஆகியவற்றிலிருந்து ஒரு பள்ளிக்கு தலா 2 காட்சிப்பொருட்கள் இடம்பெற்றுள்ளது. மேலும் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் 4 மாணவர்கள், 1 ஆசிரியர் என மொத்தம் 250 நபர்கள் பங்கேற்றுள்ளனர். இதில் இயற்கை உணவு வகைகள், மூலிகைகள், கணிதம், இயற்கை காரணிகள் உள்ளிட்ட 8 தலைப்புகளில் மாணவர்கள் தங்களது படைப்புகளை காட்சிப்படுத்தி உள்ளனர்.

மேலும் இப்படைப்புகளில் ஒவ்வொரு தலைப்பிலிருந்தும் முதல் மூன்று இடங்களை பெறும் சிறந்த 24 படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்படும். மேலும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 2016ல் நோபிள் பரிசு பெற்ற அறிவியல் அறிஞர்களின் படக்காட்சி அமைக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான குறும்படமும் திரையிடப்பட்டுள்ளது. எனவே மாணவ, மாணவிகள் இத்தகைய அறிவியல் கண்காட்சியின் மூலம் புதிய படைப்புகளை தயார் செய்து தங்களது அறிவுத்திறனை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி.சாந்தி, மாவட்ட கல்வி அலுவலர்கள் திரு.பரமசிவம் (புதுக்கோட்டை), திருமதி.சந்தியா (அறந்தாங்கி), மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் திரு.தமிழ்செல்வன், ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**